உ

Koviloor Digital Library


திருவிளக்கு பூஜை

பாடல்களும், மந்திரங்களும், பூஜா விதிகளும்



Acc no 34041

Koviloor Digital Library



Koviloor Digital Library

2-3

உ



திருவிளக்கு துதிகள்



தீப மஹாலக்ஷ்மி போற்றி மாலை
(திருவிளக்கினை பொட்டு வைத்து, பூப்போட்டு ஏற்றிவைத்து, பின்வரும் துதியைச் சொல்லி குங்குமத்தால் அர்ச்சிக்கவும்)

ஓம் பொன்னும் மெய்ப்பொருளும் தருவாய் போற்றி!
ஓம் போகமும் திருவும் புணர்ப்பாய் போற்றி!
ஓம் முற்றறி வெளியாய் மிளிர்ந்தாய் போற்றி!
ஓம் மூவுலகும் நிறைந்திருந்தாய் போற்றி!
ஓம் வரம்பில் இன்பமாய் வளர்ந்திருந்தாய் போற்றி!
ஓம் இயற்கை அறிவொளி ஆனாய் போற்றி!
ஓம் ஈரேழுலகம் ஈன்றாய் போற்றி!
ஓம் பிறர் வயமாகாப் பெரியோய் போற்றி!
ஓம் பேரின்பப் பெருக்காய் பொலிந்தோய் போற்றி!
ஓம் பேரருட் கடலாம் பொருளே போற்றி!
ஓம் முடிவிலாற்றல் உடையதாய் போற்றி!
ஓம் மூவுல குந்தொழ மூத்தோய் போற்றி!
ஓம் அளவிலாச் செல்வம் தருவாய் போற்றி!

Koviloor Digital Library

ஓம் ஆனந்த அறிவொளி விளக்கே போற்றி!
ஓம் ஓம் எனும் பொருளாய் உள்ளோய் போற்றி!
ஓம் இருள் கெடுத்து இன்பமருள் எந்தாய் போற்றி!
ஓம் மங்கள நாயகி மாமணி போற்றி!
ஓம் வளமை நல்கும் வல்லியே போற்றி!
ஓம் அறம் வளர் – நாயகி அம்மையே போற்றி!
ஓம் மின்ஒளிப் பிழம்பாய் வளர்ந்தாய் போற்றி!
ஓம் தையல் நாயகித் தாயே போற்றி!
ஓம் தொண்டர் அகத்தமர் தூமணி போற்றி!
ஓம் முக்கட் சுடரின் முதல்வி போற்றி!
ஓம் ஒளிக்குள் ஒளியாய் உயர்வாய் போற்றி!
ஓம் சூடாமணியே சுடரொளி போற்றி!
ஓம் இருள் ஒழித்து இன்பம் ஈவோய் போற்றி!
ஓம் அருள் பொழிந்து எம்மை ஆள்வாய் போற்றி!
ஓம் அறவினுக்கு அறிவாய் ஆனாய் போற்றி!
ஓம் இல்லற விளக்காம் இறைவீ போற்றி!
ஓம் சுடரே விளக்காம் தூயோய் போற்றி!
ஓம் இடரைக் களையும் இயல்பினாய் போற்றி!
ஓம் எரிசுடராய் நின்ற இறைவீ போற்றி!
ஓம் ஞானச் சுடர் விளக்காய் நின்றாய் போற்றி!

Koviloor Digital Library

ஓம் அருமறைப் பொருளாம் ஆதி போற்றி!
ஓம் தூண்டு சுடரனைய சோதி போற்றி!
ஓம் ஓதும் ஒளிவிளக்கே போற்றி!
ஓம் சோதியே போற்றி சுடரே போற்றி!
ஓம் இருள் கெடுக்கும் இல்லக விளக்கே போற்றி!
ஓம் சொல்லக விளக்காம் சோதியே போற்றி!
ஓம் பலர்காண் பல்கலை விளக்கே போற்றி!
ஓம் நல்லக நமச் சிவாய விளக்கே போற்றி!
ஓம் உவப்பிலா ஒளிவளர் விளக்கே போற்றி!
ஓம் உணர்வுசூழ் கடந்தோர் விளக்கே போற்றி!
ஓம் உடம்பெனும் மனையக விளக்கே போற்றி!
ஓம் உள்ளத் தகளி விளக்கே போற்றி!
ஓம் மடப்படும் உணர்நெய் விளக்கே போற்றி!
ஓம் உயிரெனும் திரிமயக்கு விளக்கே போற்றி!
ஓம் இடம்படும் ஞானத்தீ விளக்கே போற்றி!
ஓம் நோக்குவார்க்கு எரிகொள் விளக்கே போற்றி!
ஓம் ஆதியோய் நடுவுமாகும் விளக்கே போற்றி!
ஓம் அளவிலா அளவுமாகும் விளக்கே போற்றி!
ஓம் சோதியாய் உணர்வுமாகும் விளக்கே போற்றி!
ஓம் தில்லைப் பொதுநட விளக்கே போற்றி!

Koviloor Digital Library

ஓம் கற்பனை கடந்த சோதியே போற்றி!
ஓம் கருணையே உருவாம் விளக்கே போற்றி!
ஓம் அற்புதக்கோல விளக்கே போற்றி!
ஓம் அருமறைச் சிரத்து விளக்கே போற்றி!
ஓம் சிற்பர வியோம விளக்கே போற்றி!
ஓம் பொற்புடன் நடஞ்செயல் விளக்கே போற்றி!
ஓம் உள்ளத்திருளை ஒழிப்பாய் போற்றி!
ஓம் கள்ளப் புலனைக் கரைப்பாய் போற்றி!
ஓம் உருகுவோர் உள்ளத்து ஒளியே போற்றி!
ஓம் பெருகு அருள் சுரக்கும் பெரியோய் போற்றி!
ஓம் இருள்சேர் இருவினை எறிவாய் போற்றி!
ஓம் அருவே உருவே அருவுருவே போற்றி!
ஓம் நந்தா விளக்கே நாயகியே போற்றி!
ஓம் செந்தாமரைத்தாள் தந்தாய் போற்றி!
ஓம் தீபமங்கள ஜோதி விளக்கே போற்றி!
ஓம் மதிப்பவர் மனைமணி விளக்கே போற்றி!
ஓம் பாகம் பிரியா பராபரை போற்றி!
ஓம் ஆகம முடிமேல் அமர்ந்தாய் போற்றி!
ஓம் ஏகமும் நடஞ்செய் எந்தாய் போற்றி!
ஓம் ஊழி ஊழி உள்ளோய் போற்றி!

Koviloor Digital Library

ஓம் ஆழியான் காணா அடியோய் போற்றி!
ஓம் ஆதியும் அந்தமும் அற்றாய் போற்றி!
ஓம் முந்தைய வினையை முடிப்பாய் போற்றி!
ஓம் பொங்கும் கீர்த்தி பூரணி போற்றி!
ஓம் தண்ணருள் சுரக்கும் தாயே போற்றி!
ஓம் அருளே உருவாய் அமைந்தோய் போற்றி!
ஓம் இருநிற மக்கள் இறைவி போற்றி!
ஓம் குருவென ஞானம் கொடுப்பாய் போற்றி!
ஓம் ஆறுதல் எமக்கிங்களிப்பாய் போற்றி!
ஓம் தீதெல்லாம் தீர்க்கும் திருவே போற்றி!
ஓம் பக்தியில் ஆழ்ந்த பரமே போற்றி!
ஓம் எத்திக்குந் துதி ஏற்றாய் போற்றி!
ஓம் அஞ்சேலென்றருளும் அன்பே போற்றி!
ஓம் தஞ்சமென்றவரைச் சார்வோய் போற்றி!
ஓம் ஓதுவோர் அகத்துறை ஒளியே போற்றி!
ஓம் எல்லா உலகமும் ஆனாய் போற்றி!
ஓம் பொல்லா வினைகள் அறுப்பாய் போற்றி!
ஓம் புகழ்ச்சேவடி என்மேல் வைத்தாய் போற்றி!
ஓம் செவ்வாய்ச் செல்வம் தருவாய் போற்றி!
ஓம் பூங்குழல் விளக்கே போற்றி!

Koviloor Digital Library

ஓம் உலகம் உவப்புற வாழ்வருள் போற்றி !
ஓம் உயிர்களின் பசிப் பிணி ஒழித்தருள் போற்றி !
ஓம் செல்வம் கல்வி சிறப்பருள் போற்றி !
ஓம் நல்லன்பு ஒழுக்கம் நல்குவாய் போற்றி !
ஓம் விளக்கிட்டார்க்கு மெய்ந்நெறி விளக்குவாய் போற்றி !
ஓம் நலம் எல்லாம் உயிர்க்கும் நல்குக போற்றி !
ஓம் தாயே நின்னருள் தந்தாய் போற்றி !
ஓம் தூயநின் திருவடி தொழுதனம் போற்றி !
ஓம் போற்றி என்பார் அமரர் விளக்கே போற்றி !
ஓம் போற்றி என் அன்பொளி விளக்கே போற்றி !
ஓம் போற்றி போற்றி திருவிளக்கே போற்றி !
ஓம் தீப மஹாலக்ஷ்மியே போற்றி போற்றி !



Koviloor Digital Library

உ

ஸ்ரீ தீப மஹாலக்ஷ்மி நாமாவளி

(குங்குமத்தால் திருவிளக்கின் பீடத்தில் அர்ச்சனை செய்யவும்)

ஓம் அகண்ட தீபலக்ஷ்ம்யை நம :
ஓம் அகண்ட ப்ரகாசகாயை நம :
ஓம் அகண்ட தீபிகாயை நம :
ஓம் அகண்டஜ்யோதிஷாயை நம :
ஓம் அகில தீபலக்ஷ்ம்யை நம :
ஓம் அசல தீபலக்ஷ்ம்யை நம :
ஓம் அசேஷ தீபலக்ஷ்ம்யை நம :
ஓம் அபய தீபலக்ஷ்ம்யை நம :
ஓம் அபேத தீபலக்ஷ்ம்யை நம :
ஓம் அஜேய தீபலக்ஷ்ம்யை நம :
ஓம் அபூர்வ தீபலக்ஷ்ம்யை நம :
ஓம் அன்ன தீபலக்ஷ்ம்யை நம :
ஓம் அனந்த தீபலக்ஷ்ம்யை நம :
ஓம் ஆகம தீபலக்ஷ்ம்யை நம :
ஓம் ஆகாச தீபலக்ஷ்ம்யை நம :
ஓம் ஆசார தீபலக்ஷ்ம்யை நம :

Koviloor Digital Library

ஓம் ஆச்சர்ய தீபலக்ஷ்ம்யை நம :
ஓம் ஆத்ம தீபலக்ஷ்ம்யை நம :
ஓம் ஆதி தீபலக்ஷ்ம்யை நம :
ஓம் ஆலய தீபலக்ஷ்ம்யை நம :
ஓம் இகபர தீபலக்ஷ்ம்யை நம :
ஓம் உக்ர தீபலக்ஷ்ம்யை நம :
ஓம் ஏக தீபலக்ஷ்ம்யை நம :
ஓம் ஐச்வர்ய தீபலக்ஷ்ம்யை நம :
ஓம் ஐதிக தீபலக்ஷ்ம்யை நம :
ஓம் ஓங்கார தீபலக்ஷ்ம்யை நம :
ஓம் அமர வந்தித லக்ஷ்ம்யை நம :
ஓம் அமர பூஜித லக்ஷ்ம்யை நம :
ஓம் கனகமய லக்ஷ்ம்யை நம :
ஓம் கலாரூப லக்ஷ்ம்யை நம :
ஓம் கமலா தீபிகாயை நம :
ஓம் கருடாஸன்ய லக்ஷ்ம்யை நம :
ஓம் ககன ரூபிண்யை நம :
ஓம் கமன சூலின்யை நம :
ஓம் ஸர்வ மங்களாயை நம :
ஓம் ஸத்ய ரூபிண்யை நம :
ஓம் ஸர்வஸாக்ஷிண்யை நம :

Koviloor Digital Library

ஓம் ஸத்வ சாலின்யை நம :
ஓம் ஸத்கடாக்ஷ தாயின்யை நம :
ஓம் ஸத்கதிப்ரதாயை நம :
ஓம் ஸன்மார்க்க தாயின்யை நம :
ஓம் சத்ருஸம்ஹாரிண்யை நம :
ஓம் ஸத்வ ஸித்யை நம :
ஓம் ஸத்வ மார்க்கிண்யை நம :
ஓம் ஸித்தி ப்ரதாயின்மை நம :
ஓம் சின்மயாத்ம ரூபாயை நம :
ஓம் ஸுகப்ரதாயை நம :
ஓம் சம்பக லக்ஷ்ம்யை நம :
ஓம் ஸுமன ஸ்திதாயை நம :
ஓம் சுத்தமானஸாயை நம :
ஓம் சூக்ஷ்ம காமின்யை நம :
ஓம் ஸர்வ மங்களாயை நம :
ஓம் ஸர்வ முக்யை நம :
ஓம் ஸந்தோஷ தாத்ர்யை நம :
ஓம் ஸூக்ஷ்ம தர்சின்யை நம :
ஓம் ஜயப்ர தாயை நம :
ஓம் ஜகதா தாராயை நம :
ஓம் ஜகந் மாத்ரே நம :

Koviloor Digital Library

ஓம் ஜகத் வந்திதாயை நம :
ஓம் ஜபா நந்திதாயை நம :
ஓம் ஜயாவஹாயை நம :
ஓம் ஜய மாலின்யை நம :
ஓம் ஜயதா லக்ஷ்ம்யை நம :
ஓம் ஜகதானந்திதாயை நம :
ஓம் ஜடா தராயை நம :
ஓம் ஜடா மாலின்யை நம :
ஓம் கமலவாஸின்யை நம :
ஓம் கமலா ஸனாயை நம :
ஓம் கமல தாரிண்யை நம :
ஓம் கமல பூஷிண்யை நம :
ஓம் கமல லோசன்யை நம :
ஓம் கமலேக்ஷணாயை நம :
ஓம் கம்பு கண்ட்டாயை நம :
ஓம் ஜ்யோதிஷ்மத்யை நம :
ஓம் தமோ நிஹந்த்ரிண்யை நம :
ஓம் தாப மோஹின்யை நம :
ஓம் தாபஸ மோதின்யை நம :
ஓம் தந்த்ர ஹர்ஷிண்யை நம :
ஓம் தத்வ பாலின்யை நம :

Koviloor Digital Library

ஓம் தத்வ ரூபிண்யை நம :
ஓம் தத்வ போதின்யை நம :
ஓம் தத்வ சாலின்யை நம :
ஓம் நடன சாலின்யை நம :
ஓம் நகவிலா ஸின்யை நம :
ஓம் நய தர்மிண்யை நம :
ஓம் நர்த்தன காரிண்யை நம :
ஓம் நர்த்திதசோபி தாயை நம :
ஓம் நீதிமார்க்க தாயை நம :
ஓம் நாட்யப்ரகாசகாயை நம :
ஓம் நாமகப்ரவீண்யை நம :
ஓம் ப்ராக்ருத ரூபாயை நம :
ஓம் ப்ரகாச ராஜிதாயை நம :
ஓம் ப்ரமாணப் ப்ரதிஷ்டாயை நம :
ஓம் ப்ராபாகராத் மிகாயை நம :
ஓம் பக்தாபீஷ்டதாயை நம :
ஓம் பலப்ரதாயை நம :
ஓம் பக்தஸூஜிதாயை நம :
ஓம் பாவன மஹாலக்ஷ்ம்யை நம :
ஓம் பாக்ய தாயை நம :
ஓம் புவன ஸாக்ஷிண்யை நம :
ஓம் புவன ஸுந்தர்யை நம :

Koviloor Digital Library

ஓம் பூமி பூர்ணாயை நம :
ஓம் போக பூர்ணிகாயை நம :
ஓம் மந்த்ர ரூபிண்யை நம :
ஓம் ப்ரஸன்ன லக்ஷ்ம்யை நம :
ஓம் விஜயலக்ஷ்ம்யை நம :
ஓம் வீரலக்ஷ்ம்யை நம :
ஓம் ஸர்வ மங்களா லக்ஷ்ம்யை நம :
ஓம் ஐம் ஹ்ரீம் ச்ரீம் க்லீம் ஹ்ஸௌ : ஜகத் ப்ரஸூத்யை அஷ்டமாஸித்த்திதாயை, அஷ்டஐச்வர்ய ப்ரதாயை கமலதாரிண்யை
ஓம் ஸ்ரீ தீபமஹாலக்ஷ்ம்யை நம : ஓம் :

மீதமுள்ள எல்லாக் குங்குமத்தினையும் இட்டு, பின்வரும் மந்திரத்தைச் சொல்லவும்.



நானாவித மந்த்ர பரிமள புஷ்பாணி குங்குமம் ஸமர்ப்பயாமி

ஓம் சாந்தி :

Koviloor Digital Library

உ

திருவிளக்கு அர்ச்சனை

வெள்ளிக்கிழமைகளில் மாலையில் விளக்கேற்றி வைத்து இத்துதியைச் சொல்லி மலர் அல்லது குங்குமத்தால் அர்ச்சிப்பது, மங்களங்கள் யாவும் தரும்.

ஓம் சிவாய நம :
ஓம் சிவசக்தியே நம :
ஓம் இச்சா சக்தியே நம :
ஓம் கிரியா சக்தியே நம :
ஓம் சொர்ண சொரூபியே நம :
ஓம் ஜோதி லட்சுமியே நம :
ஓம் தீப லட்சுமியே நம :
ஓம் மகாலட்சுமியே நம :
ஓம் தனலட்சுமியே நம :
ஓம் தான்ய லட்சுமியே நம :
ஓம் தைரிய லட்சுமியே நம :
ஓம் வீரலட்சுமியே நம :
ஓம் விஜய லட்சுமியே நம :
ஓம் வித்யா லட்சுமியே நம :

Koviloor Digital Library

ஓம் ஜயலட்சுமியே நம :
ஓம் வரலட்சுமியே நம :
ஓம் கஜலட்சுமியே நம :
ஓம் காமவல்லியே நம :
ஓம் காமாட்சி சுந்தரியே நம :
ஓம் சுபலக்ஷ்மியே நம :
ஓம் ராஜலக்ஷ்மியே நம :
ஓம் கிருஹ லட்சுமியே நம :
ஓம் சித்த லட்சுமியே நம :
ஓம் சீதா லட்சுமியே நம :
ஓம் திரிபுர லட்சுமியே நம :
ஓம் சர்வமங்கள காரணியே நம :
ஓம் சர்வ துக்க நிவாரணியே நம :
ஓம் சர்வாங்க சுந்தரியே நம :
ஓம் சௌபாக்கிய லட்சுமியே நம :
ஓம் நவகிரஹ தாயினியே நம :
ஓம் அண்ட நாயகியே நம :
ஓம் அலங்கார நாயகியே நம :
ஓம் ஆனந்த சொரூபியே நம :
ஓம் அகிலாண்ட நாயகியே நம :

Koviloor Digital Library

ஓம் பிரமாண்ட நாயகியே நம :
ஓம் வாகீஸ்வர்யை நம :
ஓம் விசாலாக்ஷியை நம :
ஓம் சுமங்கல்யை நம :
ஓம் காள்யை நம :
ஓம் சண்டிகாயை நம :
ஓம் பைரவ்யை நம :
ஓம் புவனேஸ்வர்யை நம :
ஓம் நித்யாயை நம :
ஓம் ஸானந்த விபவாயை நம :
ஓம் தத்துவ திரியாயை நம :
ஓம் குணத் திரியாயை நம :
ஓம் சத்ய ஞானாயை நம :
ஓம் தமோப ஹாயை நம :
ஓம் மஹேஸ்வர்யை நம :
ஓம் பிரியாங்கனாயை நம :
ஓம் திரிபுர சுந்தர்யை நம :
ஓம் கெளர்யை நம :
ஓம் கல்யாண்யை நம :
ஓம் கல்யாணகுண சாலின்யை நம :

Koviloor Digital Library

ஓம் கமநீயாயை நம :
ஓம் தேவ்யை நம :
ஓம் சுந்தர்யை நம :
ஓம் ஸௌந்தர்யை நம :
ஓம் சுந்தர ரூபாயை நம :
ஓம் அம்பிகாயை நம :
ஓம் ஏகாட்சர்யை நம :
ஓம் திரியட்சர்யை நம :
ஓம் ஷடாட்சர்யை நம :
ஓம் அஷ்டாட்சர்யை நம :
ஓம் நவாட்சர்யை நம :
ஓம் ஷோடஸாட்சர்யை நம :
ஓம் அபர்ணாயை நம :
ஓம் பார்வத்யை நம :
ஓம் பத்ம வாஸின்யை நம :
ஓம் பங்கஜ தாரிண்யை நம :
ஓம் த்ரி லோசனாயை நம :
ஓம் ஏக ரூபாயை நம :
ஓம் மஹா ரூபாயை நம :
ஓம் பிந்து ஸ்வரூபிண்யை நம :

Koviloor Digital Library

ஓம் த்ரிகோணவாஸின்யை நம :
ஓம் பாலாயை நம :
ஓம் நித்ய யௌவனாயை நம :
ஓம் லலிதாயை நம :
ஓம் திரிசூல தாரிண்யை நம :
ஓம் கட்க தாரிண்யை நம :
ஓம் கேடக தாரிண்யை நம :
ஓம் சங்க தாரிண்யை நம :
ஓம் சக்ர தாரிண்யை நம :
ஓம் பாச தாரிண்யை நம :
ஓம் அங்குச தாரிண்யை நம :
ஓம் பத்ம தாரிண்யை நம :
ஓம் மாலா தாரிண்யை நம :
ஓம் டமருக தாரிண்யை நம :
ஓம் கபால தாரிண்யை நம :
ஓம் நாக தாரிண்யை நம :
ஓம் பிராண தாரிண்யை நம :
ஓம் சர்வ மங்களாயை நம :
ஓம் சமஸ்த ஐஸ்வர்ய தாயின்யை நம :
ஓம் சரஸ்வத்யை நம :

Koviloor Digital Library

ஓம் தீபலக்ஷ்மியை நம :
ஓம் தீப துர்க்கா தேவ்யை நம :
ஓம் ஜோதிரூபாயை நமோ நம :



தினமும் காலை அல்லது மாலையில் குலதெய்வத்தின் முன் விளக்கேற்றி வைத்து இத்துதிகளைச் சொல்வது குடும்பத்தில் அமைதி நிலவச் செய்யும்

விநாயகர்

திருவாக்கும் ; செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் ; உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர் தம் கை.

முருகன்

முருகனே செந்தில் முதல்வனே ! மாயோன்
மருகனே ! ஈசன் மகனே ! – ஒருகைமுகன்
தம்பியே ! நின்னுடைய தண்டைக்கால் எப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் நான்.

Koviloor Digital Library

ஈசன்

இல்லக விளக்கது இருள் கெடுப்பது
சொல்லக விளக்கது சோதி உள்ளது
பல்லக விளக்கது பலரும் காண்பது
நல்லக விளக்கது நமச்சிவாயவே !

திருவிளக்கு அகவல்

ஊன் ஆனாய் உயிர் ஆனாய் உயிரில் உறும் உணர்வானாய்
வான் ஆதி ஐம் பூத வகை எல்லாம் நீ ஆனாய்
தேன் ஆரும் மலர்க்கொன்றைச் சிவம் என்னும் பொருள் ஆனாய்.
நான் ஆனாய் உயிருக்கு உயிரே ஞானப் பேரொளி யுமையே.

திருவிளக்கு நமஸ்காரம்

பண்டிகை நாட்கள் அல்லது வெள்ளிக்கிழமைகளில் இயன்றபோது திருவிளக்கினை ஏற்றி வைத்து இத்துதியைச் சொல்வது சீரான வாழ்வும் சிறப்புகளும் அளிக்கும்.



இயன்றவர்கள், பின்வரும் துதியில் ஒவ்வொரு வரிசையையும் கூறிவிட்டு,
ஒவ்வொரு முறை வலம் வந்து வணங்கலாம்.

Koviloor Digital Library

அண்டாண்ட புவனங்கள் கொண்டாடும் ஜோதியே நமஸ்காரம்
அந்தகாரங்களை அழித்தோங்கும் தீபமே நமஸ்காரம்
காஞ்சிமாபுரி வாழ் காம கோடி நித்ய தீபமே நமஸ்காரம்
தில்லையில் வாழ்கின்ற சிவகாமி தீபமே நமஸ்காரம்
அண்ணாமலை வளர் அருணாசல தீபமே நமஸ்காரம்
உண்ணாமுலையாக ஓங்கும் மெய் தீபமே நமஸ்காரம்
மயிலை நகர் மணக்கும் கற்பகவல்லி தீபமே நமஸ்காரம்
காசி விஸ்வேசர் களிக்கும் மெய் தீபமே நமஸ்காரம்
மதுரையில் விளையாடும் மீனாக்ஷி தீபமே நமஸ்காரம்
காள ஹத்தியில் வாழும் ஞானாம்பாள் தீபமே நமஸ்காரம்
மயிலாடுபுரியில் வாழ் அபயாம்பாள் தீபமே நமஸ்காரம்
கண்ணப்பன் கண்டு களிக்கும் மெய் தீபமே நமஸ்காரம்
அஞ்ஞானம் போககும் ஞான தீபமே நமஸ்காரம்
வேதனையகற்றும் மெய் தீபமே நமஸ்காரம்
காலனைக் காலால் உதைத்த அபிராமி தீபமே நமஸ்காரம்
மார்க்கண்டனைக் காத்த மெய்ஞான தீபமே நமஸ்காரம்
கோமதி கௌரி கௌமாரி தீபமே நமஸ்காரம்
திரிபுராதியர்கள் துதித்த மெய் தீபமே நமஸ்காரம்
எந்நாளும் அணையாத அகண்ட மெய் தீபமே நமஸ்காரம்
பெண்களுக்கு அணியான பதிவ்ருதா தீபமே நமஸ்கரம்
சகல சௌபாக்கியங்களும் தந்தருளும் தீபமே நமஸ்காரம்

Koviloor Digital Library

எந்நாளும் அழியாத செல்வ தீபமே நமஸ்காரம்
எமவாதை இல்லாமல் காக்கும் மெய் தீபமே நமஸ்காரம்
தக்ஷணம் வந்து காக்கும் தாக்ஷாயணி தீபமே நமஸ்காரம்
பக்ஷமாம் என் கிரஹம் வாழும் தீபமே நமஸ்காரம்
பரபிரம்ம ஸ்வரூபிணியாம் தீபமே நமஸ்காரம்
(நமஸ்கரிக்க இயலாதவர்கள், ஒவ்வொரு வரியையும் சொல்லியபின் கைகுவித்து வணங்கினாலும் போதும், திருமகள் அருள் சேரும்.)

திருவிளக்கு பாடல்

விளக்கேற்றம்மா விளக்கேற்று
வினயத்துடனே விளக்கேற்று
உள்ளக்கோயிலுக்கு விளக்கேற்று
ஊருக்கு முன்னே விளக்கேற்று
திண்ணைப்பிறையில் விளக்கேற்று
திருக்கூடத்தில் விளக்கேற்று
மண்ணில் துளிர்த்து வரும் துளசி
மாடத் தடியில் விளக்கேற்று
கிழக்குப் பார்த்து விளக்கேற்று
முகத்தைப் பார்த்து விளக்கேற்று
முழுக்கப் பார்த்து விளக்கேற்று
கிணற்றங் கரையில் விளக்கேற்று

Koviloor Digital Library

முற்றமெங்கும் விளக்கேற்று
ஆனை முகனின் திருமுன்னே
ஆலிலைக் கண்ணன் திருமுன்னே
சேனாபதியின் திருமுன்னே
சேவித்திருக்க விளக்கேற்று
செல்வப் பெண்ணே நீ முன்னே
விடியும் அளவும் விளக்கேற்று
உள்ளக் கோயிலில் விளக்கேற்று
ஊருக்கு முன்னே விளக்கேற்று

குத்துவிளக்கிற்கு குங்கும அர்ச்சனை

குத்துவிளக்கினை ஏற்றிவைத்து அதில் அம்பாள் எழுந்தருளி இருப்பதாக பாவித்து குங்குமத்தால் அர்ச்சித்து வழிபடின் குறையாத செல்வமும் குன்றாத வளமும் கிட்டும்.

குங்கும அர்ச்சனை செய்தவர்க்கு அம்பாள்
கோடிகோடி பொன்னைக் கொடுப்பவளாம்
புஷ்பத்தால் அர்ச்சனை செய்தவர்க்கு – அம்பாள்
பூர்வ புண்ணிய பலனை அளிப்பவளாம்
சந்தனத்தால் அபிஷேகம் செய்தவர்க்கு அம்பாள்
சர்வாபீஷ்டங்களும் கொடுப்பளாம்
தேனால் அபிஷேகம் செய்தவர்க்கு அம்பாள்

Koviloor Digital Library

திவ்ய தரிசனம் கொடுப்பவளாம்
பாலால் அபிஷேகம் செய்தவர்க்கு அம்பாள்
பலஜன்ம பாவத்தை போக்குபவளாம்
இளநீரால் அபிஷேகம் செய்தவர்க்கு – அம்பாள்
ஈஸ்வரி பலத்தைக் கொடுப்பவளாம்
கனியால் அபிஷேகம் செய்தவர்க்கு அம்பாள்
கண்முன்னே வந்து நிற்பவளாம்
மனதால் எப்போதும் நினைத்தவர்க்கு – அம்பாள்
மஞ்சள் குங்கும மகிமை அளிப்பவளாம்
மும்முறை வலம்வந்து தொழுதவர்க்கு அம்பாள்
முன்னின்று காத்தருள் செய்பவளாம்
அடிமேல் அடி வைத்து வலம் வந்தால் – அம்பாள்
அஷ்ட சம்பத்தும் அளிப்பவளாம்
கற்பூரஜோதியைக் காண்பவர்க்கு – அம்பாள்
கைமேல் பலனை அளிப்பவளாம்
தீராத வினைகளைத் தீர்ப்பவளாம் தேவி
திருவடி சரணம் சரணம் அம்மா
காமாக்ஷி ஜயஜய மீனாக்ஷி ஜயஜய
விசாலாட்சி ! ஜயஜய ஜயஜய தீபலக்ஷ்மி ஜய

Koviloor Digital Library

ஸ்ரீதேவி நமஸ்காரம்

காலையிலோ மாலையிலோ விளக்கேற்றி பக்தி சிரத்தையுடன் இந்தத் துதியை தவறாமல் சொல்வோர்க்குச் செல்வமும், சந்தோஷமும் பெருகும். எண்ணிய எண்ணங்கள் ஈடேறும். அஷ்டலக்ஷ்மியின் அருள் அவர்கள் இல்லத்தில் நிரந்தரமாக நிலைத்திருக்கும்.

1. அகிலமான சராசரங்களுக்கும் ஈஸ்வரி லோக நாயகி அகிலமுள்ளோர் நேர்ச்சைகளை தீர்த்து வைக்கும் தேவியே நமஸ்காரம்.
2. அண்டம் முழுதுக்கும் ஆதாரமான சண்டிகே மாய ரூபியாய் அண்டம் முழுதுக்கும் வித்து ஒன்றாக விளங்கும் தேவி நமஸ்காரம்.
3. சகல ஜீவனிலும் புக்தி ரூபியாய் உள்ளில் வாழும் ஓர் ஈஸ்வரி ஸகல லோகமும் மயக்கும் மாயையாலே தேவியே நமஸ்காரம்.
4. சர்வ மங்கள ரூபிணி அம்பா ஸர்வ காமப் பிரதாயினி ஸர்வ லோக சங்கரி ஸர்வ ஸாக்ஷி தேவி நமஸ்காரம்.
5. ஸர்வபூத நிவாஸினி லோக சர்வ சங்கட நாசினி ஸர்வ பாப விமோசினி அம்பா ஸர்வ தேவி நமஸ்காரம்.
6. துஷ்டி புஷ்டி கொடுக்கும் முக்கண்ணன் ரூபிணி ஜகத்காரணி சிருஷ்டி ஸிஷ்ட ஸ்திதி நாசம் செய்திட அதிகாரி தேவி நமஸ்காரம்.

Koviloor Digital Library

7. சங்கம் சக்கரம் கதையும் சார்ங்கமும் ஆயுதங்கள் எடுத்தாளே பங்கஜ நாபி ரூபிணி பராசக்தி தேவி நமஸ்காரம்.

8. பிரம்மா விஷ்ணு ருத்ரரூப அம்சமாகவே வந்த பிராமி வைஷ்ணவி ருத்ராணி இந்திரன் ஸ்கந்தன் ஸார மைத்திரி குமாரி தேவி நமஸ்காரம்.

9. நாராயணன் அம்சமாய் நரசிம்ஸி வராஹி ரூபியாய் போரில் அசுரனை ஸம்ஹாரம் செய்திட வந்த தேவி நமஸ்காரம்.

10. சண்ட முண்ட வதம் செய்ய பராசக்தி நின் தேகத்தில் அண்டம் ஒடுக்க வந்த சாமுண்டி தேவி நமஸ்காரம்.

11. சிவ தூதி ஸ்வரூபியாய் தானவரை ஸம்ஹாரம் செய்திட பவநாசினி கோர ரூபியாய் வந்த தேவி நமஸ்காரம்.

12. கை – காலும் கண்ணும் காதும் மூக்கும் முகமும் சிரசுமாய் தோன்றிடும் மெய்யில் வாழும் மஹா மாய ரூபிசக்தி தேவி நமஸ்காரம்

13. உலகில் காணும் சொரூபங்களின் எல்லா சக்தியும் சேர்ந்து உனது ரூபமாய் உலகம் உய்ய ரூபம் எடுத்திட்ட துர்க்கா தேவி நமஸ்காரம்

14. சௌமியமான வதனத்துடன் மூன்று கருணை நயனங்களோடு, மலர்க்கரங்கள் கொடுத்துக் காப்பாற்றும் கார்த்தியாயினி தேவி நமஸ்காரம்.

15. பொல்லாத அசுரர்கள் எல்லோரையும் கொல்ல கோர ரூபமாய் கையில் சூலம் ஏந்தி வந்த காளி தேவி நமஸ்காரம்.

Koviloor Digital Library

16. திட்டமாய் உன்னை நம்புகின்ற இஷ்ட பக்தர்களுக்கு ஈஸ்வரி நீ கஷ்டமான ரோகங்கள் தீர்த்து அவர் கேட்ட வரம் கொடுத்தருளுவாய் தேவி நமஸ்காரம்.
17. ஸர்வ ரோக விநாசமும் சர்வ சத்துரு நாசங்கள் வேண்டினோம். கர்வம் எங்களை அணுகாமல் காத்து ரக்ஷிக்க வேண்டினோம் தேவி நமஸ்காரம்.
18. கஷ்டம் ஒன்றும் வராமலே என்னை துஷ்டர் வந்து அடுக்காமலே இஷ்ட தெய்வம் நீ இரங்கி என்மேல் கருணை செய்குவாய் அன்னையே தேவி நமஸ்காரம்.
19. அன்னையே உன்னையல்லாமல் வேறு தெய்வம் இல்லையென்று எண்ணினேன் உன்னையே நம்பிய எந்தன் துன்பங்கள் தீர்த்து ஆனந்தம் தருவாயே தேவி நமஸ்காரம்.
20. ஆபத்து ஒன்றும் அடுக்காமல் தேவி என் குடும்பம் விளங்கிடவும், தாபம் என்றெதும் அறிந்திடாமலே காத்தும் தாயே நீ ரட்சிப்பாய் தேவி நமஸ்காரம்.
21. சங்கர நாராயண ரூபிணி சங்கரி பரமேஸ்வரி உந்தன் பங்கஜ மலர்பாத பக்தியினை எந்நேரமும் தரவேண்டினோம் தேவி நமஸ்காரம்.



Koviloor Digital Library

தீப தியான ஸ்லோகம்

தீபஜ்யோதி : பரப்பிரஹ்ம தீப
ஸர்வதமோ பஹ :
தீபேண ஸாத்யதே ஸர்வம்
ஸந்த்யா தீப நமோஸ்துதே

திருவிளக்கு வழிபாடு

விளக்கே திருவிளக்கே வேந்தன் உடன்பிறப்பே
சோதி மணிவிளக்கே ஸ்ரீதேவி பொன்மணியே
அந்தி விளக்கே அலங்கார நாயகியே
காந்தி விளக்கே காமாக்ஷி தாயாரே
பசும்பொன் விளக்கு வைத்துப் பஞ்சுத் திரிபோட்டுக்
குளம்போல எண்ணெய் விட்டுக் கோலமுடன் ஏற்றி வைத்தேன்
ஏற்றினேன் நெய்விளக்கு எந்தன் குடிவிளங்க
வைத்தேன் திருவிளக்கு மாளிகையும் தான் விளங்க
மாளிகையில் சோதியுள்ள மாதாவைக் கண்டு மகிழ்ந்தேன் யான்
மாங்கல்யப் பிச்சை மடிப்பிச்சை தாம் அம்மா
சந்தானப் பிச்சையுடன் தனங்களும் தாரும் அம்மா
பெட்டி நிறைப் பூஷணங்கள் தாரும் அம்மா
பட்டி நிறையப் பால் பசுவைத் தாரும் அம்மா

Koviloor Digital Library

கொட்டகை நிறையக் குதிரைகளைத் தாரும் அம்மா
புகமுடம்பைத் தாரும் அம்மா பக்கத்தில் நில்லும் அம்மா
அல்லும் பகலும் என்றன் அண்டையிலே அம்மா
சேவித்து எழுந்திருந்தேன் தேவி வடிவம் கண்டேன்
வச்சிரக் கிரீடம் கண்டேன் வைடூர்ய மேனி கண்டேன்
முத்துக் கொண்டை கண்டேன் முழுப்பச்சைமாலை கண்டேன்
சவுரிமுடி கண்டேன் தாழைமடல் சூடக் கண்டேன்
பின்னல் அழகு கண்டேன் பிறை போல நெற்றி கண்டேன்
சாந்துடன் நெற்றி கண்டேன் தாயார் வடிவம் கண்டேன்
கமலத் திருமுகத்தில் கஸ்தூரிப் பொட்டுக் கண்டேன்
மார்பில் பதக்கம் மின்ன மாலையசையக் கண்டேன்



கைவளையல் கலகலவெனக் கணையாழி மின்னக் கண்டேன்
தங்க ஒட்டியாணம் தகதகென ஜொலிக்கக் கண்டேன்
காலில் சிலம்பு கண்டேன் காலாழி பீலி கண்டேன்
மங்கள நாயகியை மனங்குளிரக் கண்டு மகிழ்ந்தேன்
அடியாள் நான்
அன்னையே அருந்துணையே அருகிருந்து காரும் அம்மா
வந்தவினை அகற்றி மகாபாக்கியம் தாரும் அம்மா
தாயாரே உந்தன் காளடியில் சரணம் என்றேன்
மாதாவே உந்தன் மலரடியில் நான் பணிந்தேன்
(இதனைப் பாடி முடித்தவுடன் பதினாறு முறை நமஸ்காரம்
செய்வது நற்பலன் தரும்.)

Koviloor Digital Library

குத்துவிளக்கு துதி

குத்துவிளக்கினை ஏற்றிவைத்தோம் – இந்தக்
குவலயத்தில் எமை காத்திடுவாய்
எத்துணை இடர்வரினும் ஏற்றிடுவோம் – இனி
எம்துணை உலகினில் நீயல்லவா – (குத்து)

சொத்து சுகங்களும் நிலைப்பதுண்டோ – இந்த
மானிட ஜென்மமும் நிலைப்பதுண்டோ
சுத்த புத்தியுடன் உன்னை – தொழுதால் – வாழ்வில்

மெத்த பலன் வரும் உண்மையன்றோ (குத்து)
நித்தம் நித்தம் உனைதொழுதுவந்தால் – வாழ்வில்
புத்தம் புதுச் சுவை பெருகுமன்றோ
மாந்தர்கள் போற்றிடும் நாயகியே – அருள்
மயிலாடுதுறையில் வாழ்ந்திடும் அபயாம்பிகையே (குத்து)

சுக்ரவார தீப லக்ஷ்மி துதி

மனதில் அமைதி தருவாய்!
தீப லட்சுமி தேவி! ஜெய தீபலட்சுமி தேவி!
தீப லட்சுமி தேவி! ஜெய தீபலட்சுமி தேவி!
சுக்ரவாரம் தன்னில் – சொல்லும் தீபலட்சுமி சுலோகம்:
பக்திப் பூர்வமாக – அமைய

Koviloor Digital Library

பாக்யம் அருள வேண்டும். (தீபலட்சுமி)
அபயம் என்று வந்தால் – தேவி!
அடைக்கலமும் தருவாய்.
சுபமும் வாழ்வும் அருள்வாய் – தேவி!
சுத்த சக்தி தருவாய். (தீபலட்சுமி)
இருளை மாற்றி அருள்வாய் – வாழ்வை
இன்பமாக்கித் தருவாய்
மருளை நீக்கி அருள்வாய் – தேவி!
மனதில் அமைதி தருவாய். (தீபலட்சுமி)

பஜனைப் பாடல்

தீப தீப ஜோதியே!
தீன ரட்சகி ஜோதியே!
மோகன ரூபிணி ஜோதியே!
மோட்சப் பிரதாயினி ஜோதியே!
பங்கஜ லோசனி ஜோதியே!
பரிமள புஷ்பிணி ஜோதியே!
அம்புஜ வாஸினி ஜோதியே!
ஆனந்த ரூபினி ஜோதியே!
நித்ய கல்யாணி ஜோதியே!
நிர்மல வாஸினி ஜோதியே !

Koviloor Digital Library

அலங்கார பூஷனி ஜோதியே!
ஆதிலட்சுமி ஜோதியே!
தர்ம ஹ்ருதாயினி ஜோதியே!
தான்ய லட்சுமி ஜோதியே!
ஸத்குண வர்ஷினி ஜோதியே!
தைரிய லட்சுமி ஜோதியே!
காந்த விலாசினி ஜோதியே!
கஜ லெட்சுமி ஜோதியே!
சர்வாலங்காரணி ஜோதியே!
சந்தான லட்சுமி ஜோதியே!
வேதஸ்வரூபிணி ஜோதியே!
வித்யா லட்சுமி ஜோதியே!
கர்ண விபூஷணி ஜோதியே!
கனக லட்சுமி ஜோதியே!
விஷ்ணு பிரதாயினி ஜோதியே!
வீரமஹா லட்சுமி ஜோதியே!
பக்த ஜனப் பிரிய ஜோதியே!
பாக்ய லட்சுமி ஜோதியே!
சற்குண சீலினி ஜோதியே!
சர்வசக்தி ஜெய ஜோதியே!

Koviloor Digital Library

அங்க பூஜை

தீபலக்ஷ்மியின் பாதங்களில் மலரிட்டு வணங்குவதாகத் தொடங்கி, சிரம் வரை பூஜிப்பதாக மனதில் நினைத்தபடி, பின்வரும் துதியினை சொல்வது ஆரோக்யமும், ஆனந்தமும் அளிக்கும். (வடமொழி தெரியாதவர்கள் தமிழில் தரப்பட்டுள்ள வரிகளை மட்டும் சொன்னாலும் போதும்.)

ஓம் தீப லக்ஷ்ம்யை நமஹ பாதௌ பூஜயாமி (பாதம்)
தீப லக்ஷ்மியே உன் பாதங்களைப் பணிகிறேன்
ஓம் தீப லக்ஷ்ம்யை நமஹ ஜங்கே பூஜயாமி (கணுக்கால்)
கமலாசனியே உன் கணுக்கால்களை வணங்குகின்றேன்
ஓம் தீப லக்ஷ்ம்யை நமஹ ஜாநுநீ பூஜயாமி (முழங்கால்)
மலர்மகளே உந்தன் முழங்கால்களை பணிகின்றேன்
ஓம் தீப லக்ஷ்ம்யை நமஹ ஊரு பூஜயாமி (தொடை)
திருமகளே உன் திருத் தொடையை பூஜிக்கிறேன்
ஓம் தீப லக்ஷ்ம்யை நமஹ கடிம் பூஜயாமி (இடுப்பு)
இலக்குமியே உனது இடையை பூஜிக்கிறேன்
ஓம் தீப லக்ஷ்ம்யை நமஹ நாபி பூஜயாமி (நாபி)
கமலமகளே உன் நாபிக் கமலத்தினை நமஸ்கரிக்கிறேன்
ஓம் தீப லக்ஷ்ம்யை நமஹ குக்ஷிம் பூஜயாமி (வயிறு)
வரலக்ஷ்மியே உனது வயிறை பூஜிக்கிறேன்

Koviloor Digital Library

ஓம் தீப லக்ஷ்ம்யை நமஹ ஹ்ருதயம் பூஜயாமி (இதயம்)
இதய கமல வாசினியே உனது இருப்பிடமான இதயத்தினை பூஜிக்கிறேன்
ஓம் தீப லக்ஷ்ம்யை நமஹ ஸ்தனௌ பூஜயாமி (மார்பு)
மாலவன் நாயகியே உன் திருமார்பை வணங்குகிறேன்
ஓம் தீபலக்ஷ்ம்யை நமஹ கண்டம் பூஜயாமி (கழுத்து)
திருமகளே உன் கழுத்தினை நமஸ்கரிக்கிறேன்
ஓம் தீப லக்ஷ்ம்யை நமஹ ஸ்கந்தௌ பூஜயாமி (தோள்கள்)
தீப மகளே உனது தோள்களைப் பணிகிறேன்
ஓம் தீப லக்ஷ்ம்யை நமஹ ஹஸ்தான் பூஜயாமி (விரல்கள்)
அலைமகளே உன் திருவிரல்களை வணங்குகிறேன்
ஓம் தீப லக்ஷ்ம்யை நமஹ பாஹூன் பூஜயாமி (கைகள்)
திருமகளே உனது திருக்கரங்களை பணிகின்றேன்
ஓம் தீப லக்ஷ்ம்யை நமஹ முகம் பூஜயாமி (முகம்)
மகாலக்ஷ்மியே உனது திருமுகத்தினைத் துதிக்கிறேன்
ஓம் தீப லக்ஷ்ம்யை நமஹ நேத்ரம் பூஜயாமி (கண்கள்)
கமல மகளே உனது அருள்நிறைந்த கண்களைப் பணிகின்றேன்
ஓம் தீப லக்ஷ்ம்யை நமஹ ஓஷ்டௌ பூஜயாமி (உதடுகள்)
அலைமகளே உந்தன் அதரத்தினைத் துதிக்கின்றேன்
ஓம் தீப லக்ஷ்ம்யை நமஹ லலாடம் பூஜயாமி (நெற்றி)

Koviloor Digital Library

திருமகளே உனது திருநெற்றியைப் பணிகின்றேன்
ஓம் தீப லக்ஷ்மியை நமஹ அலகான் பூஜயாமி (கூந்தல்)
பூமகளே உனது கூந்தலை பூஜிக்கின்றேன்
ஓம் தீப லக்ஷ்மியை நமஹ சிரௌ பூஜயாமி (திருமுடி)
ஸ்ரீ தேவி உந்தன் சிரத்தினைப் பணிகின்றேன்

என்று கூறிவிட்டு 'ஸர்வமங்களாயை நமஹ : ஸர்வாணி அங்கானி பூஜயாமி' – மங்களங்களைத் தரும் மகாலக்ஷ்மியே உன்னை மனதாரப் பணிகின்றேன் என்று சொல்லி மீதமுள்ள எல்லாப் பூக்களையும் போட்டுவிட்டு, பாயாசம் அல்லது பால் நிவேதனம் செய்து வணங்கவும்.

குத்துவிளக்கு பூஜை - குறிப்புகள்

* பூஜைக்கு உரிய திருவிளக்கு மற்றும் பூஜா பாத்திரங்கள் பித்தளை, வெண்கலம் அல்லது வெள்ளியினாலானவையாக இருப்பது சிறந்தது.

* பிரதான திருவிளக்கை ஏற்றி, அம்பாளை எழுந்தருளச் செய்த பிறகு இயன்றவரை திருவிளக்கு ஆடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

* திருவிளக்கைச் சரியான பீடத்தின் மீது அட்சதை (அரிசி) இட்டு அமர்த்த வேண்டும்.

* திருவிளக்கு நன்றாக நின்று எரிய, சற்று கூடுதலாக எண்ணெய் பிடிக்கும்படியான விளக்கைப் பயன்படுத்தலாம்.

Koviloor Digital Library

* பூஜை செய்யும் போது தீபச் சுடர்கள் அணையாமல் இருப்பது நல்லது. எனவே தாராளமாக எண்ணெய் ஊற்றி வைக்கலாம்.

* உடைந்த பிளவுபட்ட, ஒட்டப்பட்ட திருவிளக்குகளை பூஜைக்கு பயன்படுத்துவதைத் தவிர்க்கவும்.

* குத்துவிளக்கில் குறைந்தபட்சம் மூன்று முகங்களில் திரி இட்டு ஏற்றலாம். ஐந்து முகங்களிலும் திரியிட்டு ஏற்றுவது சிறந்தது.

* விளக்குத் திரியாக வெள்ளை நூல் திரி அல்லது பஞ்சுத் திரிகளை உபயோகிக்கலாம்.

* பழைய துணிகளை கிழித்துத் திரிகளாக்கி பயன்படுத்தக் கூடாது.

* ஏற்களவே எரிந்த திரிகளைத் தவிர்த்துப் புதுத் திரிகளையே உபயோகித்தல் வேண்டும்.

* திருவிளக்கு பூஜை முடியும் வரை காற்றில் அணையாமல் நின்று நிதானமாக எரிய, கெட்டியான திரிகளைப் பயன்படுத்தலாம்.

* நல்லெண்ணெய் (அல்லது) சுத்தமான பசுநெய் ஊற்றி விளக்கேற்றுவது சிறப்பு.

* பூ மற்றும் திருமாங்கல்யக்கயிற்றை விளக்கின் தண்டு பாகத்தில் சூட்டலாம். ஆடையாக ரவிக்கைத் துணியையும் சுற்றலாம்.

Koviloor Digital Library

❊ குத்துவிளக்கை நேரடியாக தீக்குச்சியின் மூலம் ஏற்றாமல், தீபக்கால், சிறிய அகல் விளக்கு போன்றவற்றால் ஏற்ற வேண்டும்.

❊ ஊதுபத்தியை பூஜைக்கு உரிய பழங்கள் மீது குத்தி வைக்கக்கூடாது.

❊ பிரதான திருவிளக்கின் சுடரிலிருந்து ஊதுபத்தி, கற்பூரம் போன்றவற்றை ஏற்றக் கூடாது. துணைவிளக்கிலிருந்தே ஏற்ற வேண்டும்.

❊ குத்துவிளக்கை திருக்கோயில்களிலும், அனைவரும் சேர்ந்து கூட்டுப் பிரார்த்தனை திருவிளக்கு பூஜை செய்யும் இடங்களிலும் தவிர வேறெங்கும் தெற்குதிசை நோக்கி ஏற்றக் கூடாது.

❊ பூஜை முடிந்த பிறகு, எரிந்து கொண்டிருக்கும் தீபத்தையோ, கற்பூரத்தையோ வாயால் ஊதி அணைக்கக்கூடாது.

❊ சிறிய விரிப்பு, தடுக்கு, மணை அல்லது பலகை மேல் அமர்ந்து பூஜை செய்தல் நல்லது.

❊ வீடுகளில் பூஜை செய்யும் போது திருவிளக்கை கிழக்கு முகமாக வைத்தும், பூஜை செய்பவர் திருவிளக்கிற்கு வலதுபுறத்தில், வடக்கு முகமாக அமர்ந்தும் பூஜை செய்ய வேண்டும். இது அவரவர் வீட்டில் உள்ள இட வசதியைப் பொறுத்தது.

Koviloor Digital Library

* பூஜைக்குத் தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் முன்னதாகச் செய்து கொள்வது நல்லது. பூஜை செய்ய அமர்ந்த பிறகு இயன்றவரை இடையில் எழுந்திருக்காமல் இருக்கலாம்.

பூஜை முடியும் வரை தீபலக்ஷ்மி துதிகளையும், திருநாமங்களையும் உச்சரித்துக் கொண்டே இருப்பதன் மூலம் மனம் ஒருமுகப்படும்.

திருவிளக்கேற்ற வேண்டிய திசைகளும் பயன்களும்

கிழக்கு திசை – துன்பம் நீங்கும் கிரக பீடை விலகும்

மேற்குத் திசை – கடன் தொல்லை, சனி பீடை, கிரக தோஷம், பங்காளிகளின் பகை நீங்கும்

வடக்குத் திசை – திருமணத் தடை, சுப காரியத் தடை, கல்வித் தடை, வேலை வாய்ப்புத் தடை நீங்கும், திரவியம் கிட்டும், ஸர்வமங்களங்கள் உண்டாகும்.

தெற்குத் திசை – இத் திசையில் விளக்கேற்றுவது சரியல்ல.

குத்துவிளக்கில் தீபம் ஏற்றுவதற்குத் தக்க பலன்கள்

ஒருமுகம் ஒளியேற்றுவதால் – மத்திம பலன்

Koviloor Digital Library

இரு முகம் ஒளியேற்றுவதால் – குடும்ப ஒற்றுமை பெருகும்

மூன்று முகம் ஒளியேற்றுவதால் – புத்திரபாக்யம் கிட்டும்

நான்கு முகம் ஒளியேற்றுவதால் – பசு, பூமி, செல்வம் கிட்டும்

ஐந்து முகம் ஒளியேற்றுவதால் – அனைத்து நலன்களும் கிட்டும்

ஒரு திரியிட்டு விளக்கு ஏற்றுவதனால் கிழக்கு முகமாக எரிய வேண்டும்.

சாயங்கால வேளையில் விளக்கேற்றி மகாலக்ஷ்மியை வழிபட்டால், வேலை கிடைக்கும். நல்ல கணவன் வேண்டுவோர் எண்ணம் நிறைவேறும், குடும்ப சுகம், புத்திர பாக்கியம் கிட்டும்.

விசேஷ நாட்களில் தேங்காய், பழம், பொங்கல், சுண்டல், அவல், கடலை முதலியவற்றை நிவேதனம் செய்யலாம்.

நாள்தோறும் நடத்தும் வழிபாட்டிற்கு நெற்பொரி, முந்திரி, திராட்சை, கற்கண்டு, வெல்லம் இவற்றில் ஒன்றை நைவேத்தியமாகப் படைக்கலாம்.

செவ்வாய், வெள்ளி, அமாவாசை, பௌர்ணமி, பிரதோஷம், கார்த்திகை நட்சத்திரம் ஆகிய நாட்களில் திருக்கோயில்களில் குத்து விளக்கு பூஜை செய்வது நல்ல பலன்களைத் தரும்.

Koviloor Digital Library

நாள்தோறும் கூட திருவிளக்கு வழிபாடு செய்து வரலாம். அப்படிச் செய்து வந்தால் 108 நாட்களில் இல்லத்தில் மங்கள காரியங்கள் நடக்கும் என்பர்.

கையால் வீசியும், வாயால் ஊதியும் விளக்கை அணைக்கக்கூடாது. பக்திக் காணிக்கையாக ஓர் அரிசியை தீபத் தட்டில் வைத்து பிரார்த்தனை செய்து திரியை மெதுவாக உள்ளே இழுத்து ஒளியை எண்ணெய்யில் மறையச் செய்ய வேண்டும். அல்லது பூவினால் ஜோதியை ஒற்ற வேண்டும்

எந்த ராசிக்காரர் என்ன நிவேதனம் செய்யலாம்

தீபலக்ஷ்மிக்கு மேஷம், மிதுனம், சிம்மம், துலாம், விருச்சிகம், கும்ப ராசிக்காரர்கள் அப்பம், பருப்புப் பாயாசம் 5 வெற்றிலை, 5 மஞ்சள், 5 பாக்கு, 5 மலைப்பழம் வைத்து தாம்பூலத்துடன் ஒரு முழுத் தேங்காயையும்

ரிஷபம் : கடகம், கன்னி, தனுசு ராசிக்காரர்கள் உளுந்து வடை, பால் பாயாசம், 4 வெற்றிலை, 4 மஞ்சள், 4 பாக்கு, 4 மலைப்பழம் வைத்து தாம்பூலத்துடன் ஒரு தேங்காயை உடைத்து இரு முடிகளையும்

மகர, மீன ராசிக்காரர்கள் தேங்காய் சாதம், எலுமிச்சம் பழ சாதம், 7 வெற்றிலை, 7 பாக்கு, 7 மஞ்சள், 7 மலைப்பழம் வைத்து தாம்பூலத்துடன் இரண்டு முழுத் தேங்காயையும் நிவேதனம் செய்வது சிறப்பு.

Koviloor Digital Library

மங்களம்

தீபலக்ஷ்மி தேவிக்கு ஜயமங்களம்
தூயலக்ஷ்மி தேவிக்கு சுப மங்களம்
இருள்நீக்கும் தேவிக்கு ஜயமங்களம்
இடர்போக்கும் தேவிக்கு சுப மங்களம்
வீட்டை விளக்கும் லக்ஷ்மிக்கு ஜயமங்களம்
வேண்டும் வரம் தரும் தாய்க்கு சுபமங்களம்
ஜயமங்களம் நித்ய சுப மங்களம்
சுப மங்களம் நித்ய ஜயமங்களம்



அன்புடன் சமர்ப்பிக்கும்

பழ.மா.முத்தையா - மு.சரோஜா
வலையபட்டி

Koviloor Digital Library

Koviloor Digital Library



அன்புடன் சமர்ப்பிக்கும்

பழ.மா.முத்தையா - மு.சரோஜா

வலையபட்டி